<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.</u>

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 80/2020 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | காந்தாமணி | நாள் | 27.01.2025 |
| கணவர் பெயர் | தங்கமணி | | |

**<u>பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–</u>**

13) தாவா சொத்தில் இரண்டு சாலை வீடுகள் உள்ளதாக நான் சொல்லும் நிலையில், மேற்படி சாலை வீடுகளில் மின் இணைப்பு இல்லை என்றால், சரிதான். ஆனால் பின்னிட்டு அந்த இடத்தில் தார்சு வீடு கட்டி, மின் இணைப்பு பெற்றுவிட்டேன். மேற்படி தார்சு வீடு என் மகனுக்கு திருமணம் ஆனதற்கு முன்பு கட்டப்பட்டதா அல்லது பின்பு கட்டப்பட்டதா என்றால், பின்னர் கட்டப்பட்டது. என் மகனுக்கு திருமணம் ஆகி 15 வருடங்கள் ஆகிறது. தார்சு வீடு கட்டி 12 வருடங்கள் ஆகிறது.

14) மேற்படி தார்சு வீடு கட்டியதற்கு பஞ்சாயத்திலிருந்து பெற்ற கட்டிட அனுமதி தொடர்பான ஆவணங்கள் எதையும் நான் இவ்வழக்கில் தாக்கல்செய்யவில்லை என்றால், சரியல்ல. தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வது தவறானது என்றாலும், அவ்வாறு நான் எவ்வித ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை என்றாலும், தாக்கல் செய்துள்ளதாக தற்போது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும், சரியல்ல. தாவா சொத்தில் வீடு உள்ளதாகவோ, அதன் கதவு எண் குறித்தோ என் வழக்குரையில் நான் சொல்லவில்லை என்றால், அது குறித்து எனக்கு தெரியவில்லை.

15) அவ்வாறு வழக்குரை சொத்து விவரத்தில் நான் குறிப்பாக மேற்படி தாவா சொத்தில் வீடு உள்ளதாகவோ, அதன் கதவு எண்ணோ குறிப்பிடாத நிலையில், நான் இவ்வழக்கில் தாவா சொத்து தொடர்பாக தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் இவ்வழக்கிற்கு தொடர்பற்றவை என்றால், சரியல்ல. என் வழக்குரையிலும், என் சாட்சிய பிரமாண பத்திரிக்கையிலும் தாவா சொத்தை 2019 ம் வருடத்தில் 1 ம் பிரதிவாதி தாவா சொத்தில் ஒரு வருடம் விவசாயம் செய்துள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால், சரியல்ல. அவ்வாறு நான் சொல்லவில்லை. தொடர்ந்து 41 வருடங்களாக தாவா சொத்தை நான் தான் அனுபவித்து வருகிறேன்.

16) என் வழக்குரையிலும், என் சாட்சிய பிரமாண பத்திரிக்கையிலும் 1ம் பிரதிவாதியும், நானும் தாவா சொத்தில் விவசாயம் செய்து வந்ததாகவும், அதிலிருந்து வந்த வருமானத்தையும், செலவுகளையும் இருவரும் சமமாக பிரித்து கொண்டதாகவும் சொல்லியுள்ளேன் என்றால், சரியல்ல. அவ்வாறு நான் சொல்லவில்லை. தாவா சொத்து முழுவதும் 1ம் பிரதிவாதியும், அவரது குடும்பத்தாரும் அனுபவித்து வருகிறார்கள் என்றாலும், மேற்படி சொத்திற்கு நான் விவசாய கூலி வேலைக்கு செல்வேன் என்றாலும், சரியல்ல. மேற்படி சொத்து என்னுடையது.

17) 1ம் பிரதிவாதி மாடு வைத்துள்ளதாக நான் சொல்லும் நிலையில், எத்தனை மாடுகள் வைத்துள்ளார் என்றால், இரண்டு மாடுகள் வைத்துள்ளார். 1ம் பிரதிவாதி 6 மாடுகள் வைத்து பால் வியாபாரம் செய்து வருகிறார் என்றால், சரியல்ல. மேற்படி தாவா சொத்தில் 1ம் பிரதிவாதி மாட்டு கொட்டகை வைத்து அனுபவித்து வருகிறார் என்றால், சரியல்ல. 1ம் பிரதிவாதிக்கும், எனக்கு பிரச்சனை ஏற்பட்டதாகவும், அது தொடர்பாக காவல் துறையில் நான் புகார் அளித்ததாகவும் சொல்லும் நிலையில், அது தொடர்பான ஆவணங்கள் எதையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல. தாக்கல் செய்துள்ளேன்.

18) நான் காவல் துறையில் அளித்த CSR ரசீதை மட்டும் தான் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், மேற்படி புகாரில் என்ன எழுதப்பட்டிருந்தது என்பது குறித்து எந்த ஆவணத்தையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றாலும், சரியல்ல. மேற்படி CSR ரசீதும் கூட இவ்வழக்கிற்கு பிந்தைய ரசீது என்றால், சரிதான்.

(பிரதிவாதிகள் தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க வா.சா.1ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

ஒம்/–திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.